**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 168/2023**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. கலைவாணி** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. கார்த்திகேயன்** | **Calling** | : | |
| **Village** | : | **கோட்டூர் ஆவாரம்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **31** |
| | | | **Dated** | : | **23.10.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 2), **திருமதி. கலைவாணி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் வேலை செய்து வருகிறேன். கடந்த 29.05.2022ம் தேதி மணி 09.40 இருக்கும், என் கணவர் கார்த்திகேயனும், நானும் சீலப்பாடியில் உள்ள என் தாத்தா வீட்டிற்கு வந்து பார்த்துவிட்டு, கோட்டூர் ஆவாரம்பட்டிக்கு இரண்டு சக்கர வாகனத்தில் திரும்பிச் செல்லும்போது, ராமையன்பட்டி வளைவிற்கு சற்று முன்பாக எங்கள் பின்னால் வந்த இரண்டு சக்கர வெள்ளை நிற வாகனத்தில் இரண்டு பேர் வந்தார்கள். எங்களை அந்த வண்டி கடந்து சென்றபோது என் கழுத்தில் இருந்த கோதுமை மாடல் தங்க சங்கிலியை

அவர்களில் ஒருவர் இழுத்தது மட்டும் தான் தெரியும். என் கழுத்தில் அந்த கைப்பட்ட பிறகுதான் அவர்கள் என் 3 பவுன் டாலருடன் கூடிய சங்கிலியை அறுத்தது தெரியும். என் சங்கிலியோடு அவர்கள் அந்த வண்டியில் போய்விட்டார்கள். நான் கத்தியதைப் பார்த்து அங்கு இருந்த நபர்கள் வந்துவிட்டார்கள். அவர்களில் ஒருவர் ரெட்டியார்சத்திரம் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி, அந்த வெள்ளை நிற இருசக்கர வாகனம் போய்விட்டது என்று சொன்னார்கள். மறுநாள் என் கணவர் மட்டும் தாடிக்கொம்பு காவல்நிலையத்திற்கு போய் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

தாடிக்கொம்பு காவல்நியைலத்திற்கு மறுநாள் என் கணவர்போய் புகார் கொடுத்தார். நான் உடன் செல்லவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைத்தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். 3 பவுன் நகையை பறித்துக் கொண்டு போனதாகத்தான் சொன்னேன். போலீசார் சம்பவம் நடந்த மறுநாளே என்னை விசாரித்தார்கள். நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், ஏற்கனவே காணாமல் போன பொருளுக்கு போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 23.10.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.